விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆவணி 27 ஜுலை 23 இதழ் 211
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 12—9—82

விசேட மலிவு விற்பனை!
அகலம் குறைக்கப்பட்ட
[மஸ்கன்ஸ்] அஸ்பெஸ்டஸ்
கூரைத்தகடுகள்
12' X 3' — 10' X 3'
8' X 3' — 6' X 3'
தொடர்புகள்:
ஆனந்தி அன் கோ;
கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.
[துர்க்காதேவி
ஆலயத்திற்கு அருகாமையில்]
4385

## சர்வதேச மோசடிக் கும்பல்!

கோலாலம்பூர், செப். 11
சர்வதேச மோசடிக் கும்பல் ஒன்று ஐக்கிய அரபு எமிரேற் நாட்டின் நோட்டுக்களைப் போன்ற போலி நோட்டுக்களை மாற்றிவருவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவிலுள்ள பினாங் மாநிலத்தில் இத்தகைய மோசடியிலீடுபட்ட இந்தியர் ஒருவர் பிடிபட்டுள்ளார். இவரிடமிருந்து 25,000ரூம் பெறுமதியான போலி நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டன.

★ ஜனாதிபதி விஜயம்

# வடபகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

## பெண் ஊழியரின் கணவருக்கும் பென்ஷன்

(கொழும்பு)
அரசாங்க சேவையிலுள் பெண் ஊழியர் இறந்த பின்னர் அவரது கணவருக்கும், பிள்ளைகளுக்கும்பென்சன் கிடைக்கக் கூடிய விதத்தில் நகல் சட்டம் தயாராகிறது. விரைவில் இது பாராளுமன்றத்தில் சமர்ட்பிக்கப்படும். பொது நிர்வாக அமைச்சர் திரு மொண்டேகு ஜெயவிக்கிரம இத்தகவலைத் தெரிவித்தார்.

## முப்படைகளுக்கும் விசேஷ அதிகாரங்கள்

(கொழும்பு)
வடபகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் பலப்படுத்தப்பட்டுள்ளன. எந்த ஒரு இடத்திலும் தலைதூக்கும் 'அசம்பாவிதங்களை'யும் உடனடியாகச் சமாளிக்கக்கூடிய வகையில் முப்படையினருக்கும் விசேஷ அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எந்த ஒரு இடத்திலும் ஏற்படும் வன்செயல்களையோ, தீய சக்திகளின் நடவடிக்கைகளையோ உடனடியாக நிறுத்துவதற்கேற்ற வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தயாராக உள்ளன.

இந்த ஏற்பாடுகளின்படி எவ்விதமான பிரச்னைகளுமே ஏற்படாத விதத்தில்முப்படைகள் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் 2ம் திகதி ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தமதுவடபகுதி விஜயத்தை ஆரம்பிக்கிறார்.

## குட்டிமணி, ஜெகனை காப்பாற்றக் கோரி மேலவையிலும் தீர்மானம்!

(சென்னை
தமிழ்நாடு மேல் சபையிலும் 'குட்டிமணி ஜெகனை காப்பாற்றும்படி' மத்திய அரசைக் கோரும் தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. சங்கரலிங்கம் மேலவையில் இப் பிரேரணையை முன்மொழிந்தார்.

இலங்கையில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள குட்டிமணி, ஜெகநாதன்
(8ம் பக்கம் பார்க்க)

## வட்டு எம். பி. யார்? 18ல் தெரிந்துவிடும்!

(யாழ்ப்பாணம்)
தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழுவும், தேர்தல் நியமனக்குழுவும் இம்மாதம் 18ந் திகதி நல்லூர் எம். பி. யின் அலுவலகத்தில் கூடவிருக்கிறது.

தேர்தல் ஆணையாளர் காலியாகவுள்ள வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. நியமனம் குறித்து, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகத்துக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இதைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் நியமனக்குழு கூடி, வட்
[8-ம் பக்கம்பார்க்க]

## ★ கோப்பாய் மயானத்தில் இறந்துகிடந்த இளைஞரின் தாய் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் மயானத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இறந்துகிடந்த இளைஞர் புன்னாலைக்கட்டுவன் ஈவினையைச் சேர்ந்த பதினெட்டு வயதான ஸ்ரீகரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இறந்த இளைஞரின் தாயாரான செல்வரத்தினம் நாகநாதர் (49 வயது) என்பவர், யாழ். ஆஸ்பத்திரி பிரேதஅறையில் வைத்து தனது மகனென சுன்னாகம் பொலிசாருக்கு அடையாளம் காட்டினார்.

தனக்கு இவருடன் இரு பெண்பிள்ளைகளும் உண்டென்றும், அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பெண்கள் கல்லூரியில் ஒருவர் உயர்வகுப்பும், மற்றவர் ஜி.சி.ஈ வகுப்பு படிக்கிறாரென்றும். இறந்த மகன் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் உயர்வகுப்புப் படித்துவிட்டு இடையில் படிப்பை நிறுத்திவிட்டு விவசாயம் செய்துவந்ததாகவும் தாயார் மரணவிசாரணையில் தெரிவித்தார்.

தனது கணவர் முருகேசு நாகநாதர் ஒரு வருஷத்துக்கு முன்பு இறந்துவிட்டதாகத் தெரிவித்த அவர், கடந்த வியாழக்கிழமை காலை உணவு
(8ம் பக்கம்பார்க்க)

நல்லூர் - வீடு - விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் ரோட்டில் முத்திரைச் சந்தைக்கு அண்மையில் 3 பரப்புக் காணியில் கிணற்றுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 54, Hamer's Avenue, வெள்ளவத்தை, கொழும்பு. போன்: 588590. 4507

உ
சிவமயம்

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் துந்துபி வருஷ செப்டம்பர் திங்கள் 15-ம் நாள் புதன்கிழமை (15-9-1982) பிற்பகல் 5-04 மணி முதல் 6-04 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது புத்திரன் | எமது புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| இரவீந்திரன் | நளாயினி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் திருவருள் துணைகொண்டு திருமணம் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உறவினர்களும் நண்பர்களும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| R. புறாடியும் | C. T. கனகசபாபதியும் |
| (இளைப்பாறிய எஸ்டேட் சுப்பிரின்ரெண்டன்ற் வெட்டமுல்ல குறாப், றம்பொட.) | (பிரதேச முகாமையாளர் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்.) |
| பாரியாரும் | பாரியாரும் |
| இல. 4, பறாடி ஒழுங்கை, யாழ்ப்பாணம். | இல. 212, ஏ. வி. ரோட், அரியாலை, யாழ்ப்பாணம். |

4496

COMPUTER PROGRAMMING COURSE - 2

Commencing on Saturday 18th September 1982

Languages Taught:- Basic and Cobol.

CONTACT

REGISTRAR,

Patrician Institute

59, ST. PATRICK'S ROAD, JAFFNA. (4510)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நீர்வேலி சந்தியிலிருந்து சுமார் 200யார் மேற்கே பிரதான ஒழுங்கையில் 5½ பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விவசாயம், செய்யவோ, வீடு கட்டவோ சிறந்த இடம். தொடர்பு கொள்ளவும். வே. செல்லத்துரை, நீர்வேலி மத்தி, நீர்வேலி. 4506

புனரமைக்கப்பெற்ற C 90, C 70. C 50, CD 125 மோட்டார் சைக்கிள்களும் Delica 1979 மொடல் வானும் விற்பனைக்குண்டு மற்று எந்த விதமான வாகனமும் குறைந்த விலையில் நேரடியாகத் தருவித்துக் கொடுக்கிறோம். நா சாம்பசிவம் அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 4453

யாழ்ப்பாண நகரிலிருந்து மூன்றுமைல் தூரத்தில் மூன்று பரப்பு காணி விற்பனைக்கு இருக்கிறது தொடர்பு கொள்ளும் முகவரி: இ. பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி, 52, வைமன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 334. (4488)

புதிய லைற் எஞ்சின் விற்பனைக்கு உள்ளது 12 H. P. 1800 R. P. M. இந்தியா தயாரிப்பு. தொடர்பு: சே. இல்யாஸ் சுஜானுஸ், முல்லைத்தீவு. 4489

யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து கால் மைல் தொலைவில் 5 பரப்பு வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்குண்டு தொடர்பு; ரதி ஸ்ரோர்ஸ், சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டை. 4490

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலிருந்து ½ மைல் தூரத்தில் கொழும்புத்துறை வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 15, நக்கா ரோட், யாழ்ப்பாணம், 4500

கிளிநொச்சி 10-ம் வாய்க்காலில் நீர்ப்பாசன வசதியுடைய இருபோகமும் செய்யக்கூடிய உறுதியுடைய நெற்காணி உடன் விற்பனைக்குண்டு அ. உமாசங்கர், சட்டத்தரணி, C/O, கு. சிவகுமாரன், 7, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 4501

கண்டி வீதியில் விளையாட்டு மைதானம், யூதா கோவில், இவற்றிற்கு மிக அண்மையில் 3½ பரப்புக் குடியிருப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; சோ. சுப்பிரமணியம், 22, சின்னலங்கண்டு லேன், அரியாலை. 4504

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு ஐந்து வருடத்திற்கு மேல் வியாபார அனுபவமுள்ள விற்பனையாளர் Salesman] உடனடியாகத் தேவை. கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணம் பரீட்சையில் சித்தி பெற்றவராயும், ஆங்கில அறிவு உடையவராயும் நல்ல எழுத்து எழுதக்கூடியவராயும நாற்பது வயதுக்குக் குறைந்தவரயும், நம்பிக்கைக்குரியவராயும் இருத்தல் வேண்டும. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 4465 ஈழநாடு மே/பா, யாழ்ப்பாணம் 4465

## தேவை

சகல வசதிகளுடன் மாநகர எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை. விண்ணப்பிக்க; விளம்பர இல;4494 C/O, ஈழநாடு, யாழ்ப்பாணம். 4494

புதிய எழுத்துக்களில் 5மணித்தியாலத்தில் அச்சு வேலைகள் திறமையாகச் செய்து கொடுக்கப்படும். விபுலானந்த அச்சகம், 248/5, கே.கே.எஸ்.வீதி, யாழ்நகர். 4449

பளைப்பகுதியில், நல்ல பயன் தரும் தென்னந்தோட்டம் 25 முதல் 50 ஏக்கருக்குள் தேவை யோசெப், 13, புகையிரத நிலையம் முன்பாக) கோவில் வீதி, யாழ்ப்பாணம். போன்: 7580. 4454

## பயிற்சி

வெல்டிங், வயறிங், மோட்டார் இயந்திரவியல் செய்முறை அறிமுறையுட்பட 19-9-82 இல் ஆரம்பம். C. E T, ஜலண்ட் இன்ஸ்ரியூட், (வகாரைச்கு எதிரில்) 58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4495

1 வருட பொது விவசாயப் பயிற்சி 17 — 25 வயதுடைய ஆண்களுக்குமட்டும். சிறுஊதியம் வழங்கப்படும் விடுதிவசதி உண்டு 3-9-82 முன் விண்ணப்பிக்கவும் அதிபர், யழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனுமடம், சுன்னுகம். 4492

## வாடகைக்கு

சுண்டுக்குளி பிரதான வீதியில் சகல வசதியுடன் மருத்துவ மாணவர்களுக்கு (ஆண்) அறைகள் உடன் பாவிப்புக் உண்டு. விண்ணபிக்கவும். விளம்பர இல: 4478, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 4478

## WANTED

Retired personnel from the Police or the Armed Forces may apply before 20th September 1982 for engagement either on a full-time or assignment basis with a private organisation undertaking indespication and security works in the Jaffna District. Terms negotiable. Applicant should send full personal and carrier details and two copies of a recent photograph. Advt. No. 4499, C/o Eelanadu Ltd., P. O. Box 49, Jaffna. 4499

## ஷேக் அப்துல்லா அநுதாபக் கூட்டங்கள்

புதுடில்லி, செப். 11

காஷ்மீர் முதலமைச்சர் ஷேக் அப்துல்லாவின் மறைவையொட்டி நேற்று இந்தியாவின் பல மாநிலங்களிலும் அனுதாபக் கூட்டங்கள் நடத்தப்பட்டது

பம்பாய், மகாராஷ்டிரம் ஆகிய இடங்களிலும் இவ் அனுதாபக் கூட்டங்கள் நடத்தப் பட்டன. (வெ)

யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த.
உயர்தர பரீட்சை
ஆகஸ்ட் 1983

## மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம்.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 13-9-82ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்,
தொலைபேசி எண்: 617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 4‹2

# உத்தர பிரதேசத்தில் வெள்ளநிலைமை சீரடைவு

புதுடில்லி, செப். 11

உத்தரப் பிரதேசத்தில் வெள்ளநிலைமை சீரடைந்து வருகிறது. இங்குள்ள நதிகளின் நீர்மட்டம் குறைந்துவெள்ளம் வடிந்து வருவதாகக் கூறப்பட்டது.

இங்கு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினல் 14,000 கிராமங்கள் பாதிப்படைந்தன. ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வீடுகளைஇழந்து அகதிகளாயினர். இவ்வெள்ளப் பெருக்குக்கு 230 பேர் பலியாகினர்

உத்தரப்பிரதேசத்தில்வெள்ளத்தினல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதார நடவடிக்கைகளும், வெள்ளநிவாரணப் பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (வெ)

கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம்
முல்லைத்தீவு

## சாக்குகள் விற்பதற்கான கேள்விப் பத்திரம்

இச்சங்கத்தில் 7000 சாக்குகள் விற்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

நிபந்தனைகள் பற்றிய விபரம் மீள அளிக்கப்படும், வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்தி வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி; 25-09-82.

சு. யோசேப்,
தலைவர்.

கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு. 9-09-82. 4483

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
[வரையறுள்ளது]

## பதவி வெற்றிடம்

பதவி: மருத்துவிச்சி பயிற்சி பெற்ற தாதி

கல்வித்தராதரம்: குறைந்தபட்சம் இரண்டு அல்லது இரண்டுக்குக் குறைந்த தடவைகளில் மொழியும், எண்கணிதமும் உட்பட ஆறு பாடங்களுடன் கூடிய க. பொ. த. ப. சாதாரணதரம்

அனுபவம்: பிரசவ மருத்துவ பயிற்சியுடன் 2 வருட கால அனுபவம்.

வயதெல்லை: 23 - 40 வரை.

சம்பளம்: 225 — 395 / 10X7 12-50 X 8 (இத்துடன் படிகளும் வழங்கம்படும்]

விண்ணப்ப முடிவு திகதி: 19-9-'82

அனுப்ப வேண்டிய விலாசம்:

பொதுமுகாமையாளர்,
யாழ்ப்பாண பல நோ. கூ. சங்கம்,
74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பொதுமுகாமையாளர்,

4498

## DUBAI
## Vacancies for Female Housemaids, Nannies, Cooks, Baby Sitters

Age : 18—30 yrs. 2 Years Contract
Salary 150 US Dollars—Rs. 3100/-
Free Food, Medical and Accomodation
ENGLISH KNOWLEDGE PREFERRED
3 PASSPORT SIZE PHOTOS
2 COPIES OF PASSPORT DETAILS
BIO DATA WITH DUPLICATES

AL HAMRA ENTERPRISES
C/o A Ratnasabapathy,
45, Ambalavanar Road,
Jaffna.
4497

Labour Licence No. 188
Ref No: FE/6/ MEA/447/2626

மகராஜன் மறைவுக்கு

## நீதிமன்றம் அனுதாபம்

சென்னை, செப். 11

முன்னுள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியும், சிறந்த தமிழ் அறிஞரும், இலக்கிய வாதியுமான எஸ் மகராஜனின் மறைவுக்கு நேற்று சென்னை உயர்நீதிமன்றத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

இதனையொட்டி நீதிமன்ற நடவடிக்கைகளும் ஒரு சில நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டன. (வெ)

## தென்னை செய்கை காணிகள்

(கிளிநொச்சி)

தென்னைச் செய்கைக் கென பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராஞ்சியில் வழங்கப்பட வுள்ள காணிகளுக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 14-ம் திகதி கிளிநொச்சி காணி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்காணியை பெறுவதற்கு கிளிநொச்சி, பூநகரி, உதவி அரசாங்க அதிபர் பகுதியில் மூன்று வருடம் நிரந்தரமாக வசித்தோர் தகுதியுடையோராவார்.

## கி. சபையிடம் ஒப்படைக்க வேண்டும்

(மன்னுர்)

மன்னுர் பொது சந்தையில் வியாபாரிகளிடமிருந்துவரி அறவிடுதல் தனிப்பிட்ட நபரிடம் குத்தகைஅடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதால் தனிப்பட்ட நபர் வியாபாரிகளிடமிருந்து அதிக வரியை அறவிட்டு வருகின்றனர். இதனைத் தடுக்கும் பொருட்டு ஒருவரை நியமித்து மன்னுர் மாவட்ட அபிவிருத்தி சபையே வரி அறவிடவேண்டும் அல்லது வியாபாரிகளிடமிருந்து வரி அறவிடுதலை கிராமோதய சபையிடம் ஒப்படைக்கவேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றினை மன்னுர் கிழக்கு கிராமோதய சபை மன்னுர் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளது. (க)

## பேராசிரியர் இராதா கிருஷ்ணன் யாழ். வருகிறுர்

(யாழ்ப்பாணம்)

கம்பன் கழகத்தின் அழைப்பைஏற்று பேராசிரியர் இரா. இராதா கிருஷ்ணன் யாழ்ப்பாணத்திற்கு இம்மாதம் 15-ம் திகதி வருகை தரவுள்ளார். இவர் இம்மாதம் 29ந் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார்.

பேராசிரியர் இராதா கிருஷ்ணன் திருகோணமலையில் இம்மாதம் 17-ம், 18-ம், 19-ம் திகதிகளில் அகில இலங்கை கம்பன் கழகத்தின் சார்பில் நடைபெறவுள்ள கம்பனவிழாவிலும் சொற்பொழிவாற்றவுள்ளார்.

நல்லை ஆதீனத்தில் இம்மாதம் 24-ம் திகதி நடைபெறவுள்ள மறைந்த தமிழறிஞர் சா. கணேசனின் நினைவு அஞ்சலிக் கூட்டத்திலும் பேராசிரியர் இராதகிருஷ்ணன் உரையாற்றவுள்ளார். (வெ]

# பீகாரில் பத்திரிகைச் சட்டத்தை எதிர்த்து ஹர்த்தால்!

புதுடில்லி, செப், 11

பீகார் சட்ட சபையினுல் நிறைவேற்றப்பட்ட பத்திரிகைச் சட்டத்தை எதிர்த்து நேற்று அம்மாநிலத்தில் 12 மணித்தியால ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த ஹர்த்தாலை எதிர்க்கட்சிகளும், இளைஞர்களும் ஒழுங்கு செய்திருந்தனர். இதனையொட்டி பீகாரின் தலைநகரான பட்னுவில் பல கடைகள் மூடப்பட்டிருந்தன.

பீகாரில் ஹர்த்தால் இடம் பெற்றபோதும் அங்கு தொழில் நிலையங்களும், அத்தியாவசிய சேவைகளும் நடத்தப்பட்டதாக முதலமைச்சர் மிஸ்ரா தெரிவித்தார்.

காஷ்மீர் முதலமைச்சர் ஷேக்அப்துல்லாவின் மறைவையொட்டி நேற்று அங்கு அரச அலுவலகங்கள் மூடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பீகாரில் நடத்தப்பட்ட இந்த ஹர்த்தால் ஒரு வெற்றி என்று எதிர்க்கட்சித்தலைவரொருவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகைச் சட்டத்தை எதிர்த்து அண்மையில் இந்தியா முழுவதிலுமுள்ள பத்திரிகையாளர்கள் 24 மணித்தியால வேலை நிறுத்தமொன்றில் ஈடுபட்டது தெரிந்ததே. (வெ)

## "இந்தியாவின் இறக்குமதிகளை நெடுங்காலத்திற்கு அனுமதிக்கமுடியாது"

### நிதியமைச்சர் முகர்ஜி கூறுகிருர்

வாஷிங்டன், செப். 11

"இந்தியாவளர்ச்சியடைந்த நாடுகளுக்கு தாராளமாக ஏற்றுமதி செய்ய முடியாததால் இறக்குமதிகளை நெடுங்காலத்திற்கு அனுமதிக்க முடியாது."

இவ்வாறு இந்தியநிதியமைச்சர் திரு. பிரணப் முகர்ஜி வாஷிங்டனில் நடைபெற்ற மகாநாடொன்றில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:–

"இந்தியாவில் 75 சதவீத உற்பத்திகளை தனியார்துறையினரே மேற்கொண்டு வருகின்றனர். இந்தியா தனது உற்பத்திகளை மேலும் அதிகரிக்க அதற்குப் போதிய பணவசதி கிடைக்கவேண்டும்.

"இந்தியாவில் வெளியார் முதலீட்டிற்கு 100 சதவீத அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொழில்துறையில் அமெரிக்க–இந்தியா ஒத்துழைப்புத் தொடர்ந்து விருத்தியடைய வேண்டும்." என்ருர்.

இது தொடர்பாகத் திரு. முகர்ஜி அமெரிக்க நிதியமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடினர். (வெ)

## இஸ்ரேல்–பாலஸ்தீனியர் பிரச்னை:

## பிரெஞ்சு சாசனத்திற்கு பத்திரிகைகள் வரவேற்பு

பெய்ரூட், செப். 11

பெய்ரூட்டிலிருந்து பாலஸ்தீனியத் துருப்புக்களை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பிரெஞ்சுத் துருப்புக்கள் தாயகம் திரும்பியுள்ளன.

இப்பணியில் ஈடுபட்டிருந்த இத்தாலியத் துருப்புக்கள் இன்று தாயகம் திரும்பவுள்ளன.

பெய்ரூட்டிலிருந்து சகல பாலஸ்தீனியத் துருப்புக்களும் இம்மாதம் 14ம் திகதிக்கு முன்னர் வெளியேற்றப்பட்டு விடுவார்களென்று தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேல்–பாலஸ்தீனியப் பிரச்னைக்குத் தீர்வுகாணும் பொருட்டு பிரெஞ்சு அரசாங்கத்தினுல் வெளியிடப்பட்ட 8 அம்ச சாசனத்தை மேற்கு நாடுகளின் பத்திரிகைகள் வரவேற்றுள்ளன. இதனை வரவேற்று இப்பத்திரிகைகள் ஆசிரியத் தலையங்கங்களும் எழுதியுள்ளன.

எகிப்தும் பிரான்ஸின் இத்திட்டத்தை வரவேற்றுள்ளது. மேற்காசியப்பிரச்னை தொடர்பானபிரான்ஸ்ஸின் இச்சாதனத்தில் அடிப்படை வேறுபாடுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது

அதேவேளை மொரோக்கோவில் நடைபெற்ற அரபு உச்சி மாநாட்டை ஈரானும், லிபியாவும் கண்டித்துள்ளன. (வெ)

## அமெரிக்காவில் தனியாரின் முதல்விண்வெளி 'ரெக்கற்'

வாஷிங்டன், செப். 11

அமெரிக்காவில் முதன் முறையாக இங்குள்ள தனியார் வர்த்தக ஸ்தாபனம் ஒன்ருல் விண்வெளிக்கு 'ரெக்கற்' அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த 'ரெக்கற்' டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள மட்டாசொடா என்ற தீவிலிருந்து நேற்று முன்தினம் விண்வெளிக்குஏவப்பட்டது.

அமெரிக்காவின்சரித்திரத்திலேயே முதன்முறையாக தனியார் நிறுவனம் ஒன்ருல் அனுப்பப்பட்டதாக விபரிக்கப்படும் இந்த 'ரெக்கற்'றின் நீளம் 11.3 மீட்டர்.

விண்வெளிக்கு செலுத்தப்பட்ட ஐந்துநிமிட நேரத்தில் 196 மைல்களை இது ஊடுருவிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. மெக்ஸிகோ மீதாக வண் வெளியில் சஞ்சரித்த இந்த 'ரெக்கற்' சுமார் 10 நிமிட நேரத்தில் அக்குடாவை அண்டிய கடல் பகுதியில் ஏவப்பட்ட இடத்

(6–ம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாடு சட்டசபை ஒத்திவைப்பு

சென்னை, செப். 11

தமிழ்நாடு சட்டசபைக் கூட்டம் மறுதிகதி குறிப்பிடாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 நாட்களாகத் தமிழ்நாடு சட்டசபைக் கூட்டம் நடைபெற்று வந்தது தெரிந்ததே. (வெ)

யாழ்நகரில்
பலவகைப்
பரிசுப் பொருட்கள்



எவர்சில்வர்
கிளாஸ் வகைகள்
ரி. வி. றேடியோ
கடிகாரங்கள்
மின் இயக்கப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
பிளாஸ்ரிப் பூக்கள்
சமையலறை உபகரணங்கள்
எண்ணம் போல்
வண்ணத் தெரிவுக்கு
பிரவுண்சன்
ரேட் சென்ரர்
பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

MASTERS 25/82

யாழ்ப்பாண வாசிகளே!

சரியான பாதையில்
காலடி எடுத்து வையுங்கள்.

செல்லவேண்டிய இடம்
மேர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்
கிளை நிலையம்
11/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:– 321

நிதி, வாடகைக் கொள்வனவு,
ஆயுள், ஏனைய காப்புறுதிகளுக்கு
ஆலோசனையும் ஆதரவும்
அளிப்பவர்கள்.

தேசீய காப்புறுதிக் கூட்டுத்
தாபனத்தின் பிரதான முகவர்கள்.

இலங்கையின் பிரபலிய நிதி நிறுவனம்
உங்களுக்கு உதவக் காத்திருக்கிறது.

## ஜனாதிபதித் தேர்தலில்

# எதிர்க்கட்சி பொதுவேட்பாளர் நியமனம் சாத்தியமாகலாம்!

## குட்டிமணியும் போட்டியிட்டால் ஐ. தே. க.வுக்கு சங்கடம்,

அரசியல் வானில் எதுவும் நடக்கலாம்!

இன்று விடுதலை வீரராக போற்றப்படும் ஒருவர் நாளை தேச துரோகி என்றுகொலைக் கூண்டில் நிறுத்தப்படலாம்!

இன்று இனத்துரோகி எனத் தூற்றப்படுபவர் நாளை இனத்தின் இரட்சகராக உயர்த்தப் படலாம்.

எல்லாம் காலம் செய்யும் கோலம்!

இந்தியாவுடன் ஆயிரம் வருடங்கள் போரிடுவேன் என்று கொக்கரித்த பாகிஸ்தான் பிரதமர் அலிபூட்டோ அவரது நாட்டிலேயே ராணுவ ஆட்சியினரால் ஒரு துரோகிபோல தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார்!

இந்தியாவின் சர்வாதிகாரியாக மாறிவருகிறார் என்ற முதிய தலைவர்களின் முழக்கத்தைக் கேட்டு பதவியிலிருந்தே தூக்கி எறியப்பட்ட திருமதி இந்திராகாந்தி இன்று இந்தியாவின் அசைக்க முடியாத் தலைவராக மாத்திரமல்ல உலக நாடுகளே ஆச்சரியத்துடன் அவதானிக்கும் பெருந்தலைவர் நிலைக்கு உயர்த்தப்பட்டுவிட்டார்.

நேற்றுவரை ஒருவர் திட்டித்தீர்த்துக் கொண்டிருந்த உள்ளூர் தலைவர்கள் இனத்தின் பேரால் ஒன்றுபட்டதையும் நாம் கண்டோம்.

இன்னொரு புதுமை இன்று நிகழ்ந்துள்ளது.

நேற்றுவரை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் 'நீயா நானா' என்றவகையில் பிரச்னைப்பட்டுக்கொண்டிருந்த பிளவுபட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒரு சுமுகமான முடிவுக்கு வந்துள்ளது.

பேச்சுவார்த்தைகள், விவாதங்கள், பொதுக்கூட்டங்கள் என்று பல்வேறு வகையான முயற்சிகளினுலும் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் போன இவர்கள் தேர்தல் ஆணையாளர் சிறிமா பிரிவு சுதந்திரக் கட்சியே உத்யோகப் பூர்வ சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்று அறிவித்ததையடுத்து கொப்பேகடுவவின் நியமனத்தை ஆதரிக்க முடிவுசெய்துள்ளமை ஒரு நல்ல மாற்றம் என்று சொல்லலாம்

தமது கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் தமது புதல்வர் திரு. அனுரா பண்டாரநாயக்க நியமிக்கப்பட வேண்டுமென கருத்து கொண்டிருந்த திருமதி பண்டாரநாயக்க கட்சியின் அதிகாரப் பீடம் திரு கொப்பேகடுவவை வேட்பாளராக நியமிக்க முடிவெடுத்ததையடுத்து அவரை ஆதரிக்க முன்வந்துள்ளார். கட்சி அதிகார பீடத்தின் முடிவை அனுராவும் ஆதரிக்கிறார்.

தேர்தல் ஆணையாளர் சிறிமா சார்பு சிறிலங்கா சுதந்திரக்கட்சியை உத்தியோக பூர்வமான கட்சியாக ஏற்றுக் கொண்டுவிட்டதால் அக்கட்சியின் வேட்பாளரையே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்கப் போவதாக திரு. மைத்திரிபால சேனநாயக்க அறிவித்திருப்பது பிளவுபட்ட அக்கட்சியின் சகல பிரிவுகளையும் ஒன்றிணைக்க உதவியாய் இருக்கும்.

ஐ. தே. கட்சி வேட்பாளருக்கு கடுமையான எதிர்ப்பொன்றை ஏற்படுத்தும் முயற்சியில் இது ஒருபடி முன்னேற்றம் எனலாம். இதே முறையில் இடதுசாரிகட்சிகளும் ஒரு முடிவுக்கு வரமுடியுமானுல் நன்மையாய் இருக்கும்.

டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா அல்லது திரு. ஹெக்டர் கொப்பேகடுவா— இருவரில் ஒருவர் எதிர்க்கட்சிகளின்

**பி. எஸ். பி.**

சார்பில் போட்டிக்கு நிற்பதாயின் ஐ. தே. கட்சி வேட்பாளருக்கு கடுமையான எதிர்ப்பை உருவாக்க முடியும்.

இப்போதைய நிலையில் ஐ. தே கட்சியே பந்தயத்தின் முன்வரிசையில் காணப்படுகின்றது அதாவது அரைவாசி வெற்றி பெற்றுவிட்ட நிலை.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பொதுவேட்பாளர் ஒருவரை நியமிக்கும் நிலையில் ஜெயிலில் வாடும் குட்டிமணியும் ஒரு போட்டியாளராக நியமனம் பெற்றுல், ஐ. தே. கட்சியின் வேட்பாளர் நிலைமை மிகவும் இக்கட்டானதாகவே இருக்கும்!

அந்த நிலைமையைத்தவிர்க்க ஐ தே. கட்சியின் பகீரதப் பிரத்தனம்செய்வது இயற்கை

அடுத்த சில தினங்களில் அரசியல் வானில் மேலும் பல அதிர்வேட்டுகளையும், வாண வேடிக்கைகளையும் வாக்காளர் கண்டுகளிக்கவாய்ப் பேற்படலாம்.

★

அபிவிருத்திசபைகள் செயல்படுவதில் இருந்துவந்த சில முட்டுக்கட்டைகளைகளையும் விதத்தில் கடந்த வாரம் பாராளுமன்றம் ஒரு திருத்தப் பிரேரணையை ஏற்றுக்கொண்டது.

இச்சபைகள் முறையாகச் செயல்படுவதற்குப் போதிய அதிகாரமில்லாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுவந்த குறைபாடு இந்தத்திருத்தத்தின் மூலம் நிவர்த்திசெய்யப் பட்டுள்ளது.

அபிவிருத்திசபைகளுக்குரிய அதிகாரங்கள் அமைச்சர்களிடம் குவிந்து கிடந்ததால் இச்சபைகள் எடுக்கும் முடிவுகளுக்கு அமைச்சர்களே முட்டுக்கட்டைபோடும் நிலைமையும் இருந்துவந்தது.

இப்பொழுதுபாராளுமன்றம் ஏற்றுக்கொண்டுள்ள திருத்தத்தின்படி அமைச்சர்கள் தம்மிடமுள்ள அபிவிருத்தி தொடர்பான சில அதிகாரங்களை இச்சபைகளிடம் கையளிக்கவேண்டும். இது நடைமுறையில் வரும்போது அபிவிருத்திசபைகள் முறையாக செயல்படுவதற்கு வழிபிறக்கும் என்று எதிர்பார்க்கலாம். மேலும் இச்சபைகள் தமக்கு வேண்டிய நிதிவசதிகளைத் தேடிக்கொள்ளவும் தமது பிரதேசங்களின் தனித்துவ நிலைமைகளைப் பராமரிக்கவும் வசதியிருக்கும் என்று எதிர்பார்க்கலாம் இதற்கென மேலும் பல திருத்தங்கள் தேவைபட்டாலும் அரசு அதற்கு இடம் கொடுக்கும் என்று நம்பிடமுண்டு ஏனெனில் ஐக்கிய தேசியக்கட்சி அரசின் தனித்துவமான இந்தத்திட்டம்வெற்றிகரமாக செயல்படுவதில் அரசுக்கு மிகுந்த அக்கறையுண்டு.

## கிராமோதயசபை கோரிக்கை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மத்திய பஸ் நிலையத்தை நவீனமயப்படுத்தி பிரயாணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க ஆவன செய்யுமாறு கிளிநொச்சி கிராமோதய சபை மாவட்ட அபிவிருத்திசபையைக் கோரியுள்ளது. [க[

# பிரசவவேதனை எப்படி?

## பிரிட்டனில் உங்கள்மனைவி பிள்ளைப்பெற்றால் நீங்கள் நேரில் பார்க்கலாம்!

'பிரசவ வேதனை' என்றெல்லாம் நமது எழுத்தாளர்கள் விளாசித் தள்ளுகிறார்கள்! எத்தனை பேர் இதனை முற்று முழுதாக நேரில்பார்த்திருப்பார்கள்?

—அனேகமாகத்தங்கள்மனைவியர்கள் சொல்லக் கேட்டிருப்பார்கள், பலர் படித்து தெரிந்துகொண்டிருப்பார்கள்!

ஆனுல் இங்கிலாந்தில் அப்படியில்லை! ஒவ்வொரு கணவனும், தங்களது மனைவியரின் பிரசவ வேதனையை 'ஆதியோடந்தமாக'த் தரிசிக்கஆஸ்பத்திரிகளில் அனுமதி வழங்கியுள்ளார்கள்.

பிரசவ அறைக்குள் அனுமதிக்கப்பட்டதும்,டாக்டர்கள் தாதிகளுடன் கணவரும் இருக்கலாம்!

வாழ்வின் சகல இன்பதுன்பங்களிலெல்லாம் பங்குகொள்ள உரிமையுள்ள அதிஉன்னத தலைவனுக்கு, உச்சக்கட்ட வேதனையை நேரில் பார்த்து அவளுக்கு ஆறுதல் சொல்லமட்டும் ஏன் அனுமதிக்கக் கூடாது? நல்ல விஷயம் தான்!

இந்த விஷயத்தில் பிரிட்டன் உயர்ந்து விட்டது!

மறு உலகத்துக்கே போய் வருகிற சமாச்சாரம் இந்தப் பிரசவம்! கணவன் பக்கத்தே இருக்கிறுன் என்ற ஆறுதல் ஆவது அவளுக்கு இருக்குமே!

அதோடு அரைடசின் முக்கால் டசின் என்று குழந்தைகளைப் பெருமல் அளவாக வெள்ளைக்காரர்குழந்தையைப் பெறுவதற்கும் இதுவும் ஒரு காரணமாக இருக்கலாமோ?

மனைவி குழந்தையைப் பெறும் இடத்தில் கணவன் இருப்பதால் சில சமயங்களில் ஒரு கசப்பான விஷயத்தைமட்டும் தாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்!

பிரசவ வேதனையில், கணவனைத் தாறுமாருகப் பேச வேண்டிய நிலை பெண்களுக்கு ஏற்படுவதுண்டு! அது அப்போதைக்கு மட்டும்தானே!

பரவாயில்லை, பத்து மாதம் சுமந்து படாதவேதனைப்படும் அந்த தாய்மைக்காக இந்த சின்னவிஷயத்தை ஏற்கமுடியாதா, என்ன?

★

### அளவும் வளமும்

அளவாகக் குழந்தைகளை பெற்று அருமையான, வளமான வாழ்வு வாழ்பவர்கள் வெள்ளைக்காரர்கள்!

**-ராஜகோபால்**

—அவர்கள் வாழ்வின் வெற்றிக்கும், நாட்டின்வெற்றிக்கும் இதுவும் ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது!

இரண்டு குழந்தைகள், ஆகக் கூடினது மூன்று குழந்தைகள் தேடித்தேடி அலைந்தாலும் 'மருந்த'ச்சுக் கூட அதற்கு மேல் இல்லவே இல்லை!

இன்று நான் பார்க்கும் பிரிட்டனில் மட்டுமல்ல, முப்பது நாற்பது வயதுள்ள பலரை நான சந்தித்த போது அவர்களும் ஒருவர் அல்லது இருவருடன் மட்டும்தான் பிறந்திருக்கிறார்கள்.

அதாவது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே பிரிட்டனில் இரண்டு, மூன்று குழந்தைகள் மட்டும் தான் ஒருகுடும்பத்தில் அதற்கப்பாலும்அப்படித்தான் இருந்திருக்கிற தென்பதையும் அறிந்துகொண்டேன்!

குழந்தைகளைப்பெற்றுவிட்டு அவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் பெற்ருேர்கள்தான் நம் நாட்டில்! ஆனுல்அந்தநிலைமை அங்கு இல்லை! அண்ணனுக்குத் தங்கை பாரமில்லை!

## நெஞ்சம் மறவாத நினைவுகள்--9

இப்படி இங்கு எப்பவரப் போகிறதோ?

★

### வெள்ளைக்கார பெண் 'மணி'கள்

வெள்ளைக்காரப் பெண்களிலும் சில 'மணி'களை நான் சாதித்தேன்! விம்பிள்டன் சவுத் பார்க் ரேட்டில் நடந்த ஒரு 'பார்ட்டி'யில் ரேசியை அவரது தமிழ்க் காதலன் எனக்கு அறிமுகம்செய்துவைத்தார்.

''உமது காதலியிடம் சில கேள்விகளை தனித்துக் கேட்கப்போகிறேன் இது அவரது மனதைப் புண்படவைத்தால் மன்னிக்கவேண்டும்!''

'சேனு' என்று அன்பாக அழைக்கப்படும் அவர் எனக்கு பதில் சொல்லவில்லை.

''ரேசி! இவர் பத்திரிகைக் காரன்! என்ன கேள்வி கேட்டாலும் பதில் சொல்வாய் தானே''!—

ரேசி சிரித்துவிட்டு, எனது கேள்விகளுக்கு எல்லாம் எவ்விதயோசனையுமின்றிப் 'பட் பட்' டென்று பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

''இலங்கையைச் சேர்ந்த— அதுவும் முற்ருக வேறுபட்ட ஒரு கலாசார, பழக்கவழக்கத்தில் வாழ்ந்த ஒருவர் உங்கள் காதலனுக இருக்கிறுர். அவர் அடுத்த மாதத்தில் உங்களைத் திருமணம் செய்யப்போவதாகவும் அறிகிறேன். அப்படியானுல் மற்ற வெள்ளைக்காரப் பெண்களைப்போலத், திருமணம் செய்துவிட்டு, கொஞ்ச நாளில் (விவாகரத்து) 'டைவோர்ஸ்' தானே!''

—நம்மவர் ஒருவர் நமது நாட்டுப் பெண்ணொருவருக்கு வாழ்வு கொடுக்கலாமென்ற ஒரு உணர்வோடுதான் இந்தக் கேள்வியை ரேசியிடம் கேட்டேன்.

### ஒரேயொரு கல்யாணம்தான்

ரேசி அமைதியாக எனது கேள்விக்குப் பதில்சொன்னர்.

''நீங்கள்மற்றவர்களைப்பற்றி தான் சொல்கிறீகள்! என்னைப் பொறுத்தவரையில் என் வாழ்வில் ஒரேயொரு கல்யாணம் தான்! ஒரேஒரு கணவன் தான்! 'அவர்கள் இப்படி, அதனுல் நானும் அப்படி' நடப்பேனு என்பதுதானே உங்கள் சந்தேகம்? அவர்களுடன் என்னை ஒப்பிடாதீர்கள்! எனக்குச் 'சேனு' தான்!''

—அவர் அடுத்த கேள்வியை என்னிடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஓ. கே! வரவேற்கிறேன்! இன்னொன்று; நீங்கள் இப்போது 'வொட்கா' குடிக்கிறீர்கள்! நமது பெண்கள் இப்படியில்லை! குடிக்காமல் இருந்தால் என்ன?''

ஏளனமாக அவர் சிரித்துக் கொண்டே....

''என்ன சொல்கிறீர்கள்? உங்கள் நாட்டுப் பெண்கள் குடிப்பதில்லையா? நான் சேனு'வுடன் பழகத் தொடங்கி இரண்டு வருடங்களாகின்றன! உங்கள் நாட்டுப் பெண்கள் சிலரைப் 'பார்ட்டி' களில் 'சேனு' அறிமுகப்படுத்திவைத்தார் அத்தனை பேரும் குடிப்பதை நான் பார்த்தேன். நான் குடிப்பதை 'சேனு' விரும்பாவிட்டால் விட்டுவிடுவேன்! இது குளிர் நாடு — சின்ன வயதிலிருந்தே சூழ்நிலைக்கேற்ப இப் பழக்கம் வந்துவிட்டது—ஆனுல் நான் குடிகாரியல்ல: சேனு விரும்பினுல்விட்டுவிடுவேன்!''

—ஒரு சின்ன லெக்ஸரையே வைத்துவிட்டார் ரேசி!

''எங்கள் நாட்டில் ஒரு பெண்ணை எடுக்கும்போது, ஒரு மனைவியை மட்டும் தேர்ந்தெடுப்பதில்லை நல்ல மருமகளாக, நல்ல மச்சாளாக, நல்ல அண்ணியாகவும் இருக்கக்கூடியவளாகத்தான் பார்த்துத் தேர்ந்தெடுக்கிறுர்கள்! உங்களுக்குச் சேனு மட்டும்தானு?''

என் கேள்வியைப் புரிந்து கொண்டுவிட்டுகிறுர் ரேசி.

''உங்கள் கூற்றின்படி 'சேனு'வின் அம்மாவுக்கு நல்ல ஒரு மருமகளாக இருக்க முடியாது! சகோதரிகளுக்கு ஒரு மச்சாளாக இருக்க முடியாது! அப்படித்தானே என்னைப்பற்றி நினைக்கிறீர்கள்? விரைவில் இங்கு வரத்தான் போகிறேன். —நிரூபிக்கத்தான் போகிறேன்!''

ஒருமணி நேரம் ரேசியுடன் தனிமையில் நடந்த இந்தப் பேட்டி அவரை என் உள்ளத்தில் உயர்த்தியே விட்டது!

சேனு-ரேசி திருமணம்நான்

(5-ம் பக்கம் பார்க்க)

★ ஜனதிபதி தேர்தல்களம்

# “குமாரின் தேர்தல் பிரசாரம் அர்த்தமற்றது

## ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டதை மீண்டும் முன்வைக்கின்றூர்”

--நல்லூர் சிவா

(மட்டக்களப்பு]

‘‘திரு. குமார் பொன்னம்பலம் தாம் ஜனதிபதித் தேர்தலில் குதி கவிருப்பது தமிழ் மக்களின் தனிநாட்டுக் கொள்கையை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அரசுக்கு எடுத்துக் காட்டவே என்று கூறி வருகின்றூர். ஆனல் ஏற்கனவே தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்டபோது தமிழ்மக்கள் ஏகோபித்த ஆதரவை இக்கோரிக்கைக்கு வழங்கியுள்ளார்கள், எனவே குமாரின் பிரசாரம் அர்த்தமற்றதாகும்.’’

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரான திரு எம். சிவசிதம்பரம் கிழக்கு மாகாணத்தின் சித்தாண்டிப் பகுதியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். சித்தாண்டி கிராமோதய சபைத் தலைவர் திரு. எஸ் வேல்வேந்தன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

திரு எம் சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ‘‘குமாரின் இத்தகைய பிரசாரத்தால் ஏற்கனவே தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவளித்து அதனை ஏற்றுக்கொண்ட மக்கள் இவருக்கு ஆதரவளிக்காது பகிஷ்கரிக்கக்கூடும். அதுமட்டுமன்றி அவருக்குக் கிடைக்கவிருக்கும் வாக்குகளும் குறைவடையலாம்.

சிங்களக் கட்சிகள் மத்தியிலும் தமிழர்கள் கொள்கை மீது ஐயமேற்படலாம். ஆகையினல் திரு குமார் பொன்னம்பலம் தமது பிரசாரங்கள் குறித்து அவதானமாக இருக்கவேண்டும்.’’

அரசாங்கத்துடன் தமிழர் விடுதலைக்கூட்டணி நடத்திய பேச்சுவார்த்தைகளைப் பற்றிக் குறிப்பிட்ட திரு. சிவசிதம்பரம் தமிழ்ப் பிரதேசங்களின் பாதுகாப்பு, மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான கூடுதல் அதிகாரங்கள் ஆகியன சப்பந்தமாகவே அப்பேச்சுவார்த்தைகள் அமைந்தனவென்றும், அவ்வாறு இவ் விடயங்கள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தாவிட்டால்இன்று லெபனனிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பாலஸ்தீனர்களின் நிலைக்கே தமிழர்கள்தள்ளப்படுவார்களென்றும் சுட்டிக்காட்டினர். (கி)

# கொப்பேகடுவாவை ஆதரிக்க சிறிமாவும், அனுராவும் முடிவு

## அரசுக்கு எதிராக வீடுவீடாகச் சென்று பிரசார வேலைகளில் ஈடுபடவேண்டும்!

### 80 யூலையில் வேலையிழந்தவர்களிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

‘‘1980ம் ஆண்டு ஜூலை பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமைக்காக அரசாங்கத்தால் வேலைநீக்கஞ் செய்யப்பட்ட ஊழியர்களில் இதுவரை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படாதவர்கள் சகலரும் ஒன்றிணைந்து, மாவட்டரீதியாக குழுக்களை ஒழுங்குசெய்து ஜனதிபதித் தேர்தலில் குதிககவிருக்கும் ஐ. தே. க. அரசுக்கெதிராக வீடுவீடாகச்சென்று பிரசார வேலைகளை மேற்கொள்ள வேண்டும்’’.

இவ்வாறு சமஸ்த லங்கா ராஜ்ய லிப்பிகரு சங்கம் என்ற அமைப்பு 1980ம் ஆண்டு பொதுவேலைநிறுத்தத்தில ஈடுபட்டதனல் பாதிப்புக்குள்ளாகியிருககும் சகல ஊழியர்களையும் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தச்சங்கம் சகல தொழிற் சங்கங்களையும் 80-ம் ஆண்டு வேலை நிறுத்தத்தால் பாதிப்படைந்தவர்களுக்கு அரசுக்கெதிரான ரபிசார வேலைகளுக்கான குழுக்களை அமைப்பதற்கு உதவியாக இருக்கும்படியும் கோரியுள்ளது.

இம்மாத முதற்பகுதியில் இந்த சங்கத்தின் மத்திய கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் வேலை நிறுத்தத்தால் பாதிப்படைந்தவர்களின் நிலை ஜனதிபதித் தேர்தல் ஆகியன குறிதது ஆராயப்பட்டது. மேற்கண்ட வேண்டுகோளும் இக் கூட்டத்தின்போதே விடுக்கப்பட்டது.

1980ப் ஆண்டு பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோரில் 20,000 பேர் இன்றுவரை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளபடாதிருக்கின்றனர் என்றும் இதனல் இவர்களை நம்பி வாழும் சுமார் ஒரு லட்சம் பேர் பாதிப்படைந்துள்ளனர்என்றும் இச்சங்கத்தவரால் சுட்டிககாட்டப்பட்டது. (கி)

(கொழும்பு

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சுதந்திரக்கட்சியேஉத்தியோக பூர்வமானது என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்ததையடுத்து, திரு. ஹெக்டர் கொப்பேகடுவ ஶ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் உத்தியோக பூர்வ ஜனதிபதிரேர்தலில் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை அறிவித்த திருமதி பண்டாரநாயக்கா, எனதுமகனும்ஜனதிபதி தேர்தலில் குதிக்கவிருந்த போதிலும் கட்சியின் நன்மைக்காகத் திற்கொண்டே திரு. கொடபேகடுவவை ஆதரிக்க முடிவு செய்துள்ளேன்’’ என்று நேற்று முன்தினம் தனது ரோஸ்மட் பிளேஸ் இல்லத்தில் கூடிய ஆதரவாளர்களிடம் கூறினர்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சுதந்திரக்கட்சியே சட்டபூர்வமானதென்று தேர்தல் ஆணையாளரால் அறிவிசகப்பட்டு ‘கை’ சின்னமும் அவர்களுக்கு வழங்கப்பட்டதையடுத்து பெரும்பாலான ஶ்ரீ. ல. சு. க. ஆதரவாளர்கள் திருமதி பண்டாரநாயக்காவின் இல்லத்தில் கூடிய இவர்களில் பலர் திரு. அனுரா பண்டாரநாயக்காவையே ஜனதிபதி தேர்தல் வேட்பாளராக நிறுத்தும்படி திருமதி பண்டாரநாயக்காவை வற்புறுத்தினர். இதற்கு கட்சி எடுத்தமுடிவிலிருந்து தான் மாறப்போவதில்லையென்றுஅவர் பதிலளித்தார்.

நேற்றுமுன்தினம் கோட்டே பாராளுமன்றத்தில் வைத்து திரு. அநுரா பண்டாரநாயக்காவிடம் ஜனதிபதிதேர்தலில் அவரது நிலை பற்றி பத்திரிகை நிருபர்கள் கேள்விகளைக் கேட்டனர். அப்போது அவர்அநேகமான ஆதரவாளர்கள் என்னை இத்தேர்தலில் போட்டியிடுமாறு கோரினர் ஆனல் எனக்கு இதில் போட்டியிடும் நோக்கமில்லை. அவர்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டே போட்டியிட உத்தேசித்தேன். தற்போது திரு. ஹெக்டர் கொப்பேகடுவ எமது கட்சிசார்பில் போட்டியிடவுள்ளதால் நான் அவரையே ஆதரிக்க முடிவுசெய்து எனது யோசனையை வாபஸ்பெற்றுள்ளேன்’, என்று கூறினர். (கி)

மீண்டும் மலிவு விற்பனை!

யாழ்ப்பாண மக்களின் அபிமானம் பெற்ற நிறுவனம்

★ மின்சார உபகரணங்கள் ★ பாடசாலை உபகரணங்கள்

★ வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் பரிசுப் பொருட்களுக்கு

கெமிவிக்ஸ் - பைன்டர்கம் விநியோகஸ்தர்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகள், மின்சார ஒப்பந்தகாரர்) கடைத்தெரு பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 8291

தலைமையகம் :

பேர்ள்லேட்ஸ் அம்பலவாணர் & சன்ஸ்

78, மலிபன் வீதி, கொழும்பு - 11

தொலைபேசி: 24821 — 28244

லெட்சுமி பவான்

97, ஒல்கொட் மாவத்தை

கொழும்பு—11

போன்: 24821

# “நாகர் கோவிலில் பொதுசன வாசிகசாலை அமைக்கவேண்டும்”

## கிராமோதய சபை தீர்மானம்

(புலோலி)

நாகர்கோவிலில் பொதுசன வாசிகசாலையொன்றை அமைத்து இக்கிராமமக்களின் அறிவைவளர்க்கவேண்டுமென நாகர்கோவில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தலைவர் திரு. வ பத்மநாதனல் கொண்டுவரப்பட்ட பிரேரணை நாகர் கோவில் கிராமோதயசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கிராமோதயக் கூட்டம் நாகர்கோவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தல் கிராமோதயசபைத்தலைவர் திரு சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது. திரு. பத்மநாதனல் கொண்டுவரப்பட்ட கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

நாகர்கோவிலில் உள்ள முடிக்குரியகாணிகளில் வீடமைப்புத் திட்டமொன்றினை ஏறபடுத்தி ஏழைவீடற்றவர்களுக்கு விமோசனமளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இப்பகுதியில் மரமுந்திரிகை செய்கை, பனைநாட்டுதல் போன்றனவற்றைமேற்கொள்வதற்காகஇங்குள்ள அரசாங்க காணிகளைபபகிர்ந்தளித்து இந் நடவடிக்கைகளை மேம்படுதது வதற்கு வழிவகுக்கவேண்டும்.

நாகர்கோவில் எழுதுமட்டுவார் வீதி 10ம் கட்டை 11ம் கட்டை வீதி, நாகர் கோவில் வடக்கு வீதி, நாகர் கோவில வடக்கு குடியிருப்பு வீதி ஆகியனவற்றைத்திருத்திப்புனரமைத்து மக்களின் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இக்கிராம சிறுவர்களின்

(8-ம் பக்கம் பார்க்க)

# பிரசவவேதனை....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருக்கும் போது நடந்தது! நேரில்சென்று என்இதயபூர்வமான வாழ்த்தைத் தெரிவித்தேன்.

விரைவில்குழந்தையொன்றுக்குத்தந்தையாகப் போவதாக ‘சேனு’ எழுதியிருந்தார். எப்படி இந்தக் குடும்பம்.

## மற்றொரு குடும்பம்

இலங்கையைச் சேர்ந்த நாற்பத்துஐந்து வயதான மயில்வாகனம் திருநாவுக்கரசு இருபது வருடங்களுக்கு முன்னர் லண்டன் சென்றவர்.

அங்கு படித்து பட்டம் பெற்றுநிரந்தரமாக அங்கேயே வாழகிறூர்.

‘ஸ்கொட்லண்டை’ச் சேர்ந்த எலிசபெத் பெண்‘மணி’யைப்பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் செய்து ‘பியானே’ என்ற 14 வயது ஒரே மகளுடன் சந்தோசமாக வாழ்ந்து வருகிறூர். எலிசபெத்துக்கும் 45 வயது இருக்கும். அவர் ஒரு நிறுவனத்தில் ‘ஸ்டெனோ’வாக வேலை செய்கிறூர்.

திருநாவுக்கரசுவின் மாமியார்—அதாவது அவரது மனைவியின் அம்மாவும் அவர்கள் வீட்டிலேயே இருக்கிறூர்—அவர்கள் இருவருக்கும் உதவியாக!

—எங்கள் ‘மாமிகள்’ எங்களுடன் உதவியாக இருப்பது போல! (இங்கு மாதிரி மகள்மாருக்குஅவர்கள் ‘புத்தி’ சொல்லி கொடுப்பார்கள் என்று நான நினைக்கவில்லை).

நான் அந்தக் குடும்பத்தைச் சந்திக்கப்போனது, அருமையான மாலைநேரம்! தனதுகணவரின் நாட்டிலிருந்து வந்திருப்பதால், எலிசெபெதசும், அவரது தாயாரும் இரவு விருந்தினை தடபுடலாக ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள்.

மனம் திறந்து தனது கணவரை அடிக்கடி பாராட்டிக் கொண்டிருந்த எலிசெபெத், இலங்கைக்கு விரைவில் வரப்போவதைச் சொன்னூர் யாழ்ப்பாணத்துப் பழககவழக்கங்களை நன்கு அறிந்துவைத்திருந்தார். கீரிமலையைப், தருமலை சுடுதண்ணீர் கிணறுகளையும் பார்க்க ஆசைப்படுவதாகவும் சொன்னூர்.

எல்லாவற்றையும்விட தன் கணவரின் யாழ்ப்பாணத்தின் கிராமமொன்றில் வாழும் சகோதரர்களையும், சகோதரிகளையும் உறவினர்களையும் பார்த்து, அவர்களுடன் சில நாட்கள் தங்கவிருப்பதையே பெரிதாக கருதுகிறூர்.

‘பியானே’ தன் அப்பாவின் இடத்தில் போய், நிரந்தரமாகத் தங்கிவிடப் போவதாகச் சொல்லிக்கொள்கிறூர்!

கறுப்பு அப்பாவுக்கு வெள்ளைப்பிள்ளை! ஆனலும் ‘உரிக்கு’ வைத்து அப்பன் மாதிரி!

சோறு கறியுடன், கோழி ரோஸ்ரும், பேச்சுனும்!

கிழக்கும் மேற்கும் இணைந்து ‘ருசி’யை அதிகப்படுத்தியது!

## ஆங்கில ஆசிரியர்:

# "நேர்முகப் பரீட்சைக்கு அழைத்த சகலரையும் நியமிக்கவேண்டும்"

(சாவகச்சேரி)

முன்னர் ஒருமுறை யாழ்ப் பாணத்தில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நேர் முகப்பரீட்சை நடந்தது ஆங் கிலப்பரீட்சையில் தகுதியான 95பேரை அழைத்து 38பேரைத் தெரிவுசெய்ததால் மிகுதியா னோருக்கு ஏமாற்றம் அதே நேரம் 95க்கு அப்பாற்பட்ட வர்களை அழைத்தும் ஓர் நேர் முகப்பரீட்சை வைக்கப்பட் டது. இதுவரை எவரையும் ஆங்கில ஆசிரியர் பதவிக்கு நியமிக்கவில்லை

ஆங்கில ஆசிரியர் நியமனம் பற்றி யாழ். பல்கலைக்கழக கல்வித்துறைப் பேராசிரியர் திரு. மு சந்திரசேகரம்கருத்து தெரிவிக்கையில் மேற்கண்ட வாறு கூறினர்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

பின்னர்இரண்டாவதுபரீட்சை யில் தகுதியானவர்களை அழைத்து வவுனியாக் கல்விக் கந்தோரில் நேர்முகப் பரீட்சை நடபத்தப்படுகிறது முல்லைத் தீவு மாவட்டத்திற்கு 27 பேரும், வவுனியா மாவட்டத் திற்கு 27 பேரும் தோற்றிய தாக தெரிகிறது— மிகவும் பெருந்தொகை யான ஆங்கில ஆசிரியர்கள் தேவையான இந்த நேரத்தில் நேரமுகப்பரீட்சைக்குத் தோற் றிய சகலரையும் எடுத்து ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்த வேண்டியது அர சாங்கத்தின் முக்கிய கடமை யாகும். ஆங்கில ஆசிரியர் களாக நியமிக்கப்பட்ட பலர் சென்ற மாதம் பல்கலைக்கழகங் களில் இடம் பெற்றதையும் சுட்டிக்காட்டுவது அத்தியா வசியமாகும்.

ஆசிரிய நியமனம் தகுதி அடிப்படையில் நேர்மையான முறையில் தெரிவு செய்ய தற் போதைய கல்வி மந்திரி நட வடிக்கை எடுப்பது பாராட் டுக்குரியது.

ஜனாதிபதி தேர்தல் எதிர் நோக்கியிருக்கும் இந்த நேரத் தில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட ஒரு சிலரைத் தெரிவுசெய்து ஏனையோரைத் தெரிவு செய்யாமல் விட்டு அவர்களை விரக்தி நிலையில் தள்ளுவது விரும்பத்தக்கதல்ல

தேவையான ஆங்கில ஆசிரி யர்களை உற்றுநோக்கும்போது நேர்முகப்பரீட்சைக்கு அழைக் கப்பட்டவர் வெகுளிரே எனவே பரீட்சையில் சித்தி யடைந்து நேர்முகப்பரீட் சைக்கு அழைக்கப்பட்டவர் கள் எல்லருக்கும் ஆங்கில ஆசியர் நியமனம் வழங்கப் படுவது நீதியாகும். (க)

## புதிய சமாதான நீதவான்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் தெல்லிப்பழை யைச் சேர்ந்த திரு. சிதம்பரம் இராசலிங்கம் மல்லாகம் மாவ ட்ட நீதிமன்றத்தில் புதியசமா தான நீதிபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண் டார்.

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையில் கடமை புரியும் இவர் பல பொதுநலச்சேவை இயக்கங் களில் பங்குகொண்டுஉழைத்து வருகிறார். (க)

## பயிற்சி வகுப்பு

(கிளிநொச்சி]

கிளிநொச்சிஉதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிரா மோதய சபை உறுப்பினர் களுக்கான பயிற்சி வகுப் பொன்று கிளிநொச்சி பிரதேச சபை தலைவர் திரு. என். சுப் பிரமணியம் தலைமையில் கனிஷ்ட மகாவித்தியாலயத் தில் நடைபெற்றது.

இப் பயிற்சி வகுப்பில் 70 பேர் கலந்து கொண்டனர். உதவி அரசாங்க அதிபர் திரு கே சுப்பிரமணியம் இப்பயிற்சி வகுப்பை நடாத்தினர். (க)

# வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

வடஇலங்கை சங்கீதசபை நடாத்திய 82ம் ஆண்டு மிரு தங்கம், நடனம், (பரதம், கத களி) பண் இசை, நாடகம் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறு பேறுகள் தொடர்ந்து 'ஈழ நாடு' இதழில் வெளிவரும். மிருதங்கம் மூன்றும் பகுதி முடிவுகள் இங்கு தரப்படுகின் றன.

### மிருதங்கம்

### இரண்டாம்பகுதி

### முதலாம்பிரிவு

கோபலபிள்ளை சந்தியமுகுந் தன், சத்தியபாலன் சசீதரன், f ஞானகணேசன் தெய்வேந் திரம், நாகரத்தினம் சுதாக ரன், நதிவீரகுலரெட்ணம் செல்வநீதன், இன்பரெட் ணம், தயாளன். f சதாசிவ ஐயா ஸ்ரீரங்கநாதன், செபஸ் ரியாம்பிள்ளை தேவானந்தன், பூங்கோதை அருணசலம், பரமசாமி செந்தூரன் இராமகிருஷ்ண சர்மா சசீ தரன், சரவணமுத்து கிரிசாந் தன், மகேசன் சகாதேவன், பிலிப்ஸ் ரஞ்சித் கிறிஸ்ரியன், செல்லத்துரை கரேஸ்ராஜ, தயாபரி யோச், துஷ்ஷியா மயிலானந்தன், முருகேசு ராகவன். நடராஜா சிவ சோதி, இராசரத்தினம் சுகி தனன், f கணேசசுந்தரன் ஸ்ரீ கண்ணதாஸ், f கந்தையா சுதர்சன், தேவேந்திரன் சேழியன். சிற்றம்பலம் இரா சேந்திரா, இராமநாதன் முகுந்தன், சுப்பிரமணியம் சேந்தன், வித்தியானந்தன் சிவமைந்தன், f விஞயகமூர்த்தி இளங்குமரன், யோகேஸவரன் வசந்தமனோகரன், தம்பிராசா மோகன், வேலுப்பிள்ளை சிவகுமார், கதிரவேலு ரமணேஸ், பாலசுப்பிரமணி யம் பவானந்தன், f சமர சிங்கம் ஜெயசிங்கம், சாம்ப சிவமூர்த்தி சிவயோகன், இரத்தினராசா யோசேப் இராஜகரன்.

### இரண்டாம்பகுதி

### இரண்டாம்பிரிவு

பஸ்தியாம்பிள்ளை அ. ச. சறீஷ்குமார் புஷ்னல், பசுபதி லிங்கம் திருஞானலிங்கம், நேசராஜா சதீஸ்குமார், செல்லத்துரை சுகுமாரன், நாகரெத்தினம் சுதாகரன், சிவசண்முகானந்தேஸ்வர சர்மா சிவசேகரன், ஜோசப் சுபஜீத், சதாசிவ ஐயர் நடராஜன், அருட்பிரகாசம் அன்ரனிப்ரைட்ஜோ, சகா தேவன் தில்லைராஜ். சோமாஸ் கந்தர் குமரேசன், சுப்பிர மணியம் சுரேஸ்குமார், யோகானந்தசிவம் தயாளன், வைத்திலிங்கம் சுகுமார், யோகீஸ்வரக்குருக்கள் சிவ யோகராசா, கனகசபாரெத்தி னம் சசீகரன். சோமசுந்தரம் சுரேஷ், சண்முகசுந்தரம் ஆரூரன், சோமசுந்தரம் லிங்கம், கனகசுந்தரம் ஷண்முகசுந்தரம், இரத்தின ராசா இரமணன், கனகசபை ஸ்ரீசங்கர், ஐயாத்துரை குரு பரன், பாலசுப்பிரமணியம் தவபாலன், கதிர்காமத்தம்பி கதிர்காமசுதர்சன், ஆறுமுகம் தில்லைநடராசா, பெரியதம்பி நவநாதன், நரெத்தினம் ரூபன், கணபதிப்பிள்ளை தினகரன், கந்தசாமி கிருஷ்ண குமார்.

### சாதாரணசித்தி

சண்முகநாதன் நரேந்திரன், நவரத்தினராசா ஜனகன், ஆறுமுகம் ஜெயசங்கர், சிவராசா துகிலன், தருமராசா சயானந்தன், சண்முகநாதன் சிவசங்கர், இம்மானுவேல் யேம்ஸ்மேரியன். சனலிங்கம் நிரஞ்சன், மாணிக்கவாசகர் சிவமோகன், விஜயநாயகம் செந்தூரன், செல்வநாயகம் சிவகுமாரன். நல்லையா சர்வோதயன், அந்தோனி வில்லியம், அமிர்தலிங்கம் பிரபாகரன், சதாசிவஐயர் ஸ்ரீதரன், கோணேஸ்வர மூர்த்தி ராம்குமார். யோசப் சுபகாரீ, ஜெபின்டேவிட் நிருஜ்டேவிட், கந்தையா றமணன், கனகசபை முருளீ தரன். மார்க்கண்டு தேவராசா காங்கேஸ் சுரேஸ். பரமேஸ் வரன் திருமாறன். செல்லத் துரை ஆனந்தராசா, முத்துக் குமாரசாமி கேசவன், தங்க ராஜா மகேந்திரராஜா, தில்லையம்பலம் யசோதரன், சுப்பிரமணியம் ஜெயபாலன், சுப்பிரமணியம் ஜெயசீலன், சாமுவேல் பிரபாகரன், தங்க வடிவேல் சுரேந்திரதாஸ், பரமசாமி ஜெயேந்திரன், குமாரசாமி பிரபாகரன், பரமசாமி லோகேந்திரன்.

(தொடரும்)

# தந்தை கண்டித்ததால் மகன் தற்கொலை!

[சாவகச்சேரி]

மீசாலைவடக்கைச் சேர்ந்த மூத்ததம்பி சிவராசா என்னும் 22வயது இளைஞன் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்

இவரது மரண விசார ணையை சாவகச்சேரி வைத்திய சாலையில்திடீர்மரணவிசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் நடாத்தினர்.

சாவகச்சேரிப் பொலிஸ் உத்தியோகத்தர் நாதன்சாட்சி களாக காலமானவரின் தகப் பன் க. மூத்ததம்பி. தாயார் மூத்ததம்பி கனகம்மா, சகோ தரர் மூத்ததம்பி செல்வராசா என்பவர்களை ஆஜர்செய்தார்.

காலமானவர் தோட்டச் செய்கையில் மிகவும் கவன முடையவரென்றும் சம்பவ தினம் காலை தாயாரைச் சைக் கிளில்சாவகச்சேரிக்குகொண்டு போய் சேர்த்து விட்டு வீட்டுக் குச் சென்றபோது அவரது சகோதரன் முதல் நாள் இரவு ''ரெலிவிசன்'' பார்த்துவிட்டு நல்ல உறக்கத்தில் இருந்ததா கவும், காலமானவர் அவரை எழுப்பி அடித்து தோட்டத் திற்கு அனுப்ப முற்பட்டதாக வும், இதைப்பார்த்த தகப்பன் காலமானவருக்கு கன்னத்தில் அடித்ததாகவும், அப்பொழுது காலமானவர் பார் பார் விளை யாட்டுக்காட்டுகிறேன்''என்று கூறிவிட்டுத் தோட்டத்திற்குச் சென்று அங்குவைத்திருந்த கிருமி நாசினியை எடுத்து அருந்தியதாகவும் விசாரணை யில் கூறப்பட்டது.

உடனடியாக சாவகச்சேரி வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு 5 நிமிடங்களில் அங்கு மரணமானர் என்றும் விசாரணையில் தெரியவந்தது. சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்ட மரணவிசா ரணை அதிகாரி என். தர்மேந் திரன் தற்கொலை எனத்தீர்ப் பளித்தார். (க

## ''தலைமைக்குக் கட்டுப்பட்டவர்''

[சுழிபுரம்]

''மறைந்த வட்டு எம். பி. 'திரு' தனது சுகபோகத் தையோ அல்லது சுயநலத் தையோ பெரிதாகக்கொண்டு மதிக்கவில்லை. தமிழ் இனத் தின் நல்வாழ்வே தனது வாழ்வாகக் கொண்டவர். இதனுல்தான் தமிழர் விடுத லைக் கூட்டணி உருவாகிச் செயல்பட முடிந்தது. அம ரர் திருநாவுக்கரசு யாவரும் ஒற்றுமையாக வாழ்வதையும், தலைமைக்குக் கட்டுப்பட்டு காரியம் செய்வதையும் தனது குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த உத்தமர்''

இவ்வாறுதிருமதி மங்கையற் கரசி அமிர்தலிங்கம் பண்ணு கம் மாதர் அபிவிருத்திச் சங் கத்தினர் நடாத்திய அமரர் திருநாவுக்கரசுவின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்க மண்டபத்தில் நடை பெற்ற கூட்டத்திற்கு சங்கத் தலைவி திருமதி நவராணி சிவ சுப்பிரமணியம் தலைமை வகி த்தார். வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. செந்தில்வடிவேல். நாக, பதும நாதன், ஆசிரியர் திரு. அ. எதிர்வீரசிங்கம், பண்டிதர் ப. இராசாகுரு ஆகியோர் உட்பட மற்றும்பலர் உரை யாற்றினர்.

## பாண்டிச்சேரியில் எண்ணெய் வளம்

சென்னை செப். 11

பாண்டிச்சேரியிலுள்ள பறங் கிப்பேட்டைப் பகுதியிலுள்ள 4வது கிணற்றிலிருந்து தினசரி 400 பீப்பா எண்ணெயும், 70,000 கனமீற்றர்நிலவாயுவும் கிடைத்து வருவதாகத் தெரி விக்கப்பட்டது. (வெ)

## அமெரிக்கா...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

திலிருந்து 515 கிலோ மீட் டர் தொலைவில் சென்று வீழ்ந்தது.

இதனை கரைக்கு மீட்டுவர கப்பலொன்று வீழ்ந்த இட த்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது (கி-வெ)

## ஸெயில்சிங்கின் கேரளா விஜயம்

புதுடில்லி, செப். 11

இந்திய ஜனதிபதி திரு. ஸெயில்சிங் இன்று கேரளா விற்கு விஜயம் செய்கிருர்.

திரு. ஸெயில்சிங் ஜனதிபதி யாகப் பதவியேற்ற பின்னர் கேரளாவிற்கு விஜயம்செய்வது இதுவே முதல்தடவையாகும். (வெ)

### பயங்கர ஆயுதங்களை காட்டி

# ஒய்வுபெற்ற உத்தியோகத்தர் வீட்டில் 47,750 ரூபா நகைகள் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

ஒய்வுபெற்ற உத்தியோகத் தர் ஒருவரின் வீட்டில் பயங் கர ஆயுதங்களைக்காட்டிப் பய முறுத்திய நான்கு இளைஞர்கள் தாலிக்கொடி உட்பட 47 750 ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளை அடித்துச் சென்றுள் ளனர்.

உரும்பராயைச் சேர்ந்த சட்டநாதர் செல்லத்துரை [84 வயது] என்பவரின் வீட்டி லேயே இக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

சம்பவ தினமிரவு 10 மணி யளவில் வீட்டுக்குள் புகுந்த 4 இளைஞர்கள், செல்லத் துரையையும் அவரது மனைவியான பூரணரத்தினம் செல்லத்துரையையும் பயங்கர ஆயுதங்களைக்காட்டிப் பய முறுத்தி, 16 பவுண் தாலிக் கொடி, 4 சோடி காப்பு ஒரு போத்தல் மாட்டின் பிறண்டி 7, 500 ரூபா ரொக்கப்பணம ஆகியவற்றைக் கொள்ளை அடித்துச் சென்றதாக சுன்ன கம் பொலிசில் புகார் செய்யப் பட்டுள்ளது.

இக்கொள்ளைச் சம்பவம் நடைபெறுவதற்கு இரு வாரங் களுக்கு முன்பும் இந்த வீட் டின் குசினி குள்இருந்த பெண் பூரணரத்தினம் அணிந்திருந்த சங்கிலியை இரு இளைஞர்கள் அறுத்துச் சென்றனராம்.

இந்த இரு இளைஞர்களுக்கும் பின்பு நடைபெற்ற கொள்ளைச் சம்பவத்துக்கும் தொடர்பிருக் கலாமென பொலிசார் சந்தே கிக்கின்றனர்.

சுன்னகம் பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டர் எஸ். சிவ ராசா பொலிஸ் கான்ஸ்டபிள் கள் இ. கந்தசாமி, ரி. குண சிங்கா ஆகியோர் விசாரணை நடத்திவருகின்றனர். (மா)

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரேட், யாழ்ப்பாணம்.
போன்: ?199 தந்தி; வைரம்

யாழ்ப்பாண

## கிறிஸ்தவ ஐக்கிய சங்க 75வது ஆண்டுவிழா!

[அரியாலே]

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் 75-ம் ஆண்டு நிறைவு விழாவும், எழுப்புதற் கூட்டங்களும் செப்டம்பர் மாதம் 16, 17, 18ந் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

16ந் திகதி மாலே 4 மணிக்கு ஸ்திரிகள் கூட்டமும், 5-30 மணிக்கு எழுப்புதல் கீதங்களும், 6 மணிக்கு அருளுரையும் நடைபெறும்.

17-ந் திகதி மாலே 4 மணிக்கு வாலிபர் கூட்டமும், 5-30 மணிக்கு எழுப்புதல் கீதங்களும், 6 மணிக்கு அருளுரையும் நடைபெறும்.

18-ந் திகதி மாலே 4 மணிக்கு 75-வது ஆண்டு நிறைவு விழா பகிரங்க கூட்டமும், 5-30 மணிக்கு எழுப்புதற் கீதங்களும், 6 மணிக்கு அருளுரையும் நடைபெறும்.

எழுப்புதற் கூட்டங்களில் தென்னிந்திய திருச்சபை திருச்சி- தஞ்சாவூர் மறைமாவட்டப் பேராயர் பேரருள் திரு. கலாநிதி ஆர்.போல்ராஜ் ஆண்டகை அருளுரைநிகழ்த்துவார்கள். [க]


ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

ராஜா (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்-ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
13-9-82 வரை
தனிமரம்

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ தினசரி
[யாழ்ப்பாணம்] 10-30, 2-15, 4-45, 7-15, 9-30
DEATH DIAMENTIoN

ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளே

ராணி (யாழ் நகர்) 9வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார் – கமலஹாசன், ஜெய்சித்ரா
தங்கத்தி ல வைரம்

5-வது மகளிர் வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்.நகர்)
நேர்மையும் துணிவும் கொண்ட சேகர், வேலேக்காக அலேயும் செந்தில், குடும்பச் சுமையிலே கலங்கித் தவிக்கும் வாசு, சினிமா உலகிலே நடிகனுக வரத்துடிக்கும் சிவா, தந்தையின் அன்புக்கும் பாசத்துக்கும் ஏங்கும் குமார், இவர்களின் வரண்ட வாழ்க்கை வட்டத்திலே பசுமையை ஏற்படுத்த முயலும் கீதாவை—அவளின் தியாக உணர்வினே— இன்றே காணத் தவறுதீர்கள்!—
பாலேவனச்சோலே
(கலர்)

றீகல் (யாழ்.நகர்) DAILY 5 SHOWS
PASSAGE War film)
From 13th Clint Eastwood in
OUTLAW JOSSE WALES

சாந்தி (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
13-9-82 வரை
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
பெற்ருல்தான் பிள்ளேயா
(புதிய பிரதி)


## நயினே ஸ்ரீநாகபூஷணி அம்மன்

# தேவஸ்தான நடத்துநராக வேலணே ஏ. ஜி. ஏ. நியமனம்!

(யாழ்ப்பாணம்)


நயினே ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் விவகாரம் தொடர்பான வழக்கில் வேலணே உதவி அரசாங்க அதிபர்திரு. ஏ. சி. நர்சராசா நயினே ஸ்ரீநாகபூஷணி அம்மன் தேவஸ்தான மகாசபை நடாத்துனராக யாழ். மாவட்ட நீதிபதி திரு. எம். டி. ஜேசுரத்தினத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்

இவ்வழக்கு யாழ் மாவட்ட நீதிபதி திரு. ஜேசுரத்தினம் முன்னிலேயில் விசாரணே செய்யப்பட்டது.

நயினே ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் தர்மகர்த்தா சபையில் மீண்டும் ஒழுங்கீனங்களும், ஊழல்களும, முறையீனங்களும்மலிந்துவிட்டசால் இதனே நிவர்த்தி செய்வதற்கு வேலணே உதவி அரசாங்க அதிபா திரு. ஏ. சி. நாகராசாவின் சேவையை உபயோகிக்கவும் அவரே கூட்டங்களே ஒழுங்காக நடாத்தவேண்டுமென்றும் இத்தீர்ப்பின்படி ஐந்துவருட சேவை முடிந்த தெரிவுசெய்த அங்கத்தவர்களே நீக்கிப்புதிய அங்கத்தவர்களே தெரிவுசெய்த வேண்டுமென்றும் கோவிலின் முன்னேற்றத்தைப் பற்றிய அறிக்கை ஒன்றை 82 நவம்பர் 19-ம் திகதயன்றே அலலது அதன் முன்போ நீதிமன்றுக்கு அறிவிக்கவேண்டுமென்றும் அதன் பிறகு நிரந்தரத் தீர்வு காணும் தீர்ப்பொன்று வழங்கப்படும் என்றும் தீர்ப்பில் நீதிபதி தெரிவித்தார்.

இவ்வழக்கின் மனுதார்களாக வேலுப்பிள்ளே பொன்னம்பலமும் கந்தசாமி கனக சபாபதியும் எதிர்மனுதார்களாக கனகசபை கதிரவேற்பிள்ளேயும் மற்றும் ஆறுபேர்களும உள்ளனர். (க)

## நல்லேயா மாஸ்டர்



"நெருநல் உளனெருவன் இன்றில்லேயென்றும் பெருமை புடைத்திவ்வுலகு''

நேற்றிருந்தவர் இன்றில்லே என்ற இக்குறட்பாவை மெய்யாக்கிவிட்டார். அமரத்துவமடைந்த நல்லேயா மாஸ்டர் குமாரசுவாமி என்ற இயற்பெயருடைய மாஸ்டர் தன்னேயறிந்தவர்கள் எல்லோராலும் மாஸ்டர் என்றே அன்பாக அழைக்கப்பட்டவர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தனது போக்காலும் செய்கையாலும் பேச்சாலும், கவர்ந்தவர். சாந்தம் தவழும் சிரித்த முகம் எதற்கும் கோபம் கொள்ளாத சுபாவம் யாவர்க்கும் உதவி செய்ய வேண்டும் என்ற நந்நோக்கம் எதனேயும் ஒளிவு மறைவின்றிக் கதைத்துவிடும் வெள்ளே உள்ளம் இத்தனே சிறந்த குணதிசயங்களேக் கொண்டவர் மாஸ்டர். ஒரு நாள் முழுதாகப் படுக்கையில் கிடக்காமல் தான் அன்போடும் பரிவோடும் நேசித்து பரிவு காட்டிய இனசனம், சுற்றம் சூழல் எல்லோரையும் பிரிந்து சென்றுவிட்டார்.

நல்லூரிலே பிறந்து பெருமாள் கோவிலடியிலே திருமணம்செய்து வாழ்க்கை நடத்தியவர். பிறந்த இடத்திலும் புகுந்த இடத்திலும் ஒதுங்கி வாழாமல் எல்லோருடைய சுகதுக்கங்களிலும் பங்குகொண்டு வாழ்ந்தவர் வாழ்வில் தனக்கு ஏற்பட்ட சுகதுக்கங்களேயும். சோதனேகளேயும் இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டவர். பிறர்க்கு உதவுவதைப் பெரும் பேறெனக் கருதி எந்நேரத்திலும் எவர்வந்து உதவி கேட்பினும் அதனே முடித்துக் கொடுத்துவிட வேண்டுமென்ற ஆவலுடன் செயற்பட்டவர்.

அரசடி விநாயகர் ஆலய பரிபாலனத்தைச் செம்மையாகச் செய்த அவ்வுத்தம தொண்டனே விநாயகப் பெருமான் தனதாக்கிக்கொண்டார். குழந்தைக்கு குழந்தையாகவும் பெரியவருக்கு பெரியவராகவும் பழகிய மாஸ்டர் அவர்களே எதிர்பாராத விதத்தில் காலன் பறித்துக் கொண்டான். பலரது இழப்பு அவர்களது குடும்பத்தை மட்டுமே பாதிக்கும். சிலரது இழப்போ குடும்பத்தவர் என்ற எல்லேயைக் கடந்து சுற்றம், சூழல் இன சனம் எல்லோரையுமே பாதிக்கும். அத்தகைய சிலரில் ஒருவரே அமரர் நல்லேயா மாஸ்டர். பிறந்தார், இருந்தார், இறந்தார் என்றிராது தன்னேடு பழகியவரையும், தன்னே அறிந்தவர்களேயும் ஒவ்வொரு செயலிலும், சிந்தையிலும் தன்னே நினேக்கும்படியாகப் பிரிந்து சென்ருர். அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

ஓர் அன்பன்

### சர்வதேச போர்எதிர்ப்பு இயக்கத்துக்கு

## அறவழிப் போராட்டக்குழு இலங்கைகிளேயாக அங்கீகரிப்பு!

[யாழ்ப்பாணம்]

அறவழிப் போராட்டக்குழுவினே சர்வதேச போர் எதிர்ப்பாளர் இயக்கம் அதன் இலங்கைக்கிளேயாக ஏற்றுஅங்கீகரித்துள்ளது

அறவழிப் போராட்டக்குழு இந்த இணைப்புக்கான மனுக்களே கடந்த மார்ச் மாதம் அனுப்பிவைத்திருந்தது.

இத்தாலி தேசத்தில் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் பல நாடுகளின் போர் எதிர்ப்பாளர் இயக்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அம்மகாநாட்டில் அறவழிப் போராட்டக்குழுவை இலங்கைக்கிளேயாக அங்கீகரித்தது.

போர் எதிர்ப்பாளர் இயக்கம் உலகில் போரைத்தடுத்து நிறுத்துவதையும் அறவழிசமாதானக் கொள்கைகளேப்பரப்புவதையும் தமது அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு இயங்கி வருகிறது

1979ம் ஆண்டு இந்த இயக்கத்தின் மாநாடு டென்மார்க்கில் நடைபெற்றபோது அறவழிப்போராட்டக் குழுவின் சார்பில் அதன் ஸ்தாபகர் திரு; க. சச்சிதானந்தன் கலந்து கொண்டார்ரி என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

## 30,000 ரூபா பெறுமதியுள்ள மீன்பிடிவலேகள் திருட்டு

(மன்னர்)

வீட்டில்யாருமில்லாதநேரம் பார்த்து வீட்டினுள் புகுந்த திருடர்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலேகளேத் திருடிச் சென்றுள்ளனர்.

இத் திருட்டுச் சம்பவம் தலேமனுர் மேற்கு பீற்றர் மடுத்தீன் என்பவரது வீட்டிலேயே இடம்பெற்றது.

திருடர்கள் வீட்டின்கதவை உடைத்து உட்புகுந்தே வலேகளேத் திருடிச் சென்றுள்ளார்கள்.

இத் திருட்டு சம்பவம் பற்றி தலேமன்னர் பொலிசில் புகார் செய்யப்பட்டதை தயடுத்தே பொலிசார் விசாரணே மேற்கொண்டு வருகின்றனர். (க)

## வரப்பெற்றேம்

மில்க்வைற் செய்தி புரட்டாதி இதழ் வரப்பெற்றேம்.

மகாகவி பாரதியாரின் உருவப் படத்தை முகப்பு அட்டையாகத் தாங்கி வெளிவந்திருக்கும் மில்க் வைற் செய்தி மகாகவியின் வாழ்க்கை வரலாற்றையும், அவரது பலதரப்பட்ட பணிகளேயும் சுருக்கமாகஆனுல் தெளிவாக எடுத்தியம்பும் கட்டுரையொன்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

பாரதியாரின் வரலாறு அறியாதவர்களுக்கு இக்கட்டுரை பெரிதும் உதவும்.

'பெ'

## பரிசளிப்பு வைபவம்

[யாழ்ப்பாணம்)

நொதேர்ண் ஸ்போட்ஸ் சஞ்சிகையின் ஆதரவில் நடைபெற்ற 11பேர், 6 பேர்கொண்ட மென்பந்து கிரிக்கட் போட்டியில் வெற்றிபெற்ற கழகங்களுக்கு பரிசளிக்கும வைபவம் இன்று மாலே நல்லூர் சங்கிலியன் திறந்தவெளியரங்கில் திரு. கனக கசவன் தலேமையில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் யாழ் அரசாங்க அதிபரும், மாவட்ட அபிவிருத்திச்சபை செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களே வழங்கவுள்ளார்

[வெ]

## மூக்குக் கண்ணுடி திருட்டு

சாவகச்சேரி)

சாவகச்சேரிப் புகையிரத நிலேயத்தில் யாழ்ப்பாணம் — கொழும்பு மெயில் வண்டியில் இராசையா ரவி என்பவருக்கு சொந்தமான மூக்குக்கண்ணுடி திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம்தொடர்பாகசந்

[8ம் பக்கம் பார்க்க]

## 'கிராமோதய சபைகள்

# மக்களின் தேவைகளை அறிந்தே திட்டங்கள் தயாரிக்கவேண்டும்'

(கரவெட்டி)

''கிராமோதய சபைகள் தமது கிராமப்பகுதி அபிவிருத்தி சம்பந்தமான திட்டங்களைத் தயாரிக்கும் போது கிராமமக்களின் வாழ்க்கை முறைகளையும், தேவைகளையும் அறிந்துகொண்டே திட்டங்களைத் தயாரிக்கவேண்டும்''

இவ்வாறு யாழ். உள்ளூராட்சி திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஆய்வு அலுவலர் திரு. எம் குமாரதாசன் அச்சுவேலி கிராம அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட கிராமோதய சபைத் தலைவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கில் விரிவுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

சிரேஷ்ட ஆய்வு அலுவலர் திரு குமாரதாசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: எந்த ஒரு நாட்டிலும் கிராமப் புறங்களே அதிகமாகக்காணப் படுகின்றன இலங்கையில் 90 வீதமான பிரதேசம் கிராமப் புறங்களே மிகுதி 10 வீதமான பகுதி நகரப்புறங்களாகவிளங்குகின்றன. மக்களின் வாழும் இடங்களை நோக்கும்போதும் 85 வீதமானோர் கிராமப்பகுதிகளிலேயே வாழ்கிறார்கள்.

''நகரப் புறங்களுக்கு பல வசதிகள் வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. ஆனல் நகரபபுறவசதிகளோ கிராமப்புறங்களுக்குக் கிடைப்பதில்லை எனவே கூடுதலான பகுதியாக அபிவிருத்தி அடையாமல் வசதிகள் இன்றி கிடக்கும்கிராமப்புறங்களை அபிவிருத்தி செய்வதிலேயே கவனம்செலுத்தவேண்டும். கிராமப்புறங்கள் அபிவிருத்தியடையாமல் எந்த ஒரு நாடும் அபிவிருத்தியடைய முடியாது

''இதனைக்கருத்திற்கொண்டு தான் எமது அரசாங்கமும் பின்வல என்னும் இடத்தில் அங்குள்ள மூலப்பொருளான தும்பைப் பயன்படுத்தி அப்பகுதிமக்களுக்கு வேலைவாய்ப்பு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது.

''இந்த வகையில் கிராமோதய சபைகளும் தமது பகுதி மூலவளங்களைக்கொண்டு தமது கிராம மக்களுக்கு ஏற்ற வகையில் மக்கள் விரும்பத்தக்க வகையில் அபிவிருத்தித்திட்டங்களைத் தீட்டவேண்டும்.

அப்போதே அத்திட்டங்கள் பிரதேசசபைமூலம் மாவட்ட சபைக்கு வரும்போது நிறைவேற்றக் கூடியதாகஇருக்கும்.

1983ல் இருந்து யாழ். மாவட்ட எம். பி. க்கள் 11 பேர் மூலம் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைக்கு ஒதுக்கப் படும் நிதியாக மொத்தமாக 2,75,0000 ரூபா கிடைக்கவுள்ளது. இந்த நிதியிலிருந்தே யாழ். மாவட்ட அபிவிருத்தி வேலைகள் நடைபெறவுள்ளன. அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்றுக் குழுக்களே செயற்படுத்தும்'' (க—வெ)

# இப்படியும் நடக்கிறது

தமிழக எழுத்தாளர் ஜெயகாந்தன் ஒரு பேட்டியில்—

''.........நேற்று ஒரு புலி என்னைப் பார்க்க வந்திருந்தது. ஈழத்து விடுதலைப்புலி அது. நான் புலியைக் கைதட்டிக் கூப்பிட்டேன் உடனே அது வந்துவிட்டது...''

இத் தகவல், ... பிரபல தமிழகவார ஏட்டில் வெளிவந்திருக்கிறது.

'ஊர்குருவி

## மினி பஸ்ஸில் பிரசவம்!

(சாவகச்சேரி)

முறிகண்டியைச் சேர்ந்த கர்ப்பிணிப்பெண் ஒருவர் மினிபஸ்ஸில் பயணம் செய்கையில் குழந்தையொன்றைப் பிரசவித்தார்.

பிரசவ வேதனைக்குட்பட்ட அப் பெண்ணை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்ல, அப்பகுதியில் கார்கள் கிடைக்காமல் போகவே, திருகோணமலையிலிருந்து வந்த 'மினிபஸ்' ஒன்றில் அப் பெண்ணை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினார்கள். ஆஸ்பத்திரிக்குச் செல்லுமுன் அப் பெண் 'மினிபஸ்'ஸில் குழந்தையொன்றை பிரசவித்தார். [க]

# வல்லை வடக்கில் வீடமைப்புத் திட்டம்

## கிராமோதயசபை தீர்மானம்

(புலோலி)

வல்லை வடக்குப் பகுதியில் வீடில்லாத ஏழை மக்களுக்கு வீடமைப்புத் திட்டமொன்று அமைத்து விமோசனமளிக்க வேண்டுமென உடுப்பிட்டி எம் பி. திரு. த. இராசலிங்கத்தையும், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலுவையும் கோருவதென வல்லை வடக்கு கிராமோதயசபை தீர்மானித்துள்ளது.

இக்கிராமோதய சபைக்கூட்டம் கிராமோதயசபைத்தலைவர் திரு. கே. செல்லத்துரை தலைமையில் வல்லை றோ. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

காட்டுவளவு அணைட் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு திரு. என். பாலசுப்பிரமணியம், திரு எம் சங்கரசாந்தலிங்கம், திரு சி சிவபாலசிங்கம் ஆகியோரைக் கொண்ட உபகுழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது. (க)

# நடுக்கடலில் கொள்ளையர் நடத்திய சண்டித்தனம்!

## பொருட்களை இழந்து திரும்பிய நமது மீனவரின் பரிதாபம்!!

(சுழிபுரம்]

சுழிபுரம் புளியந்துறையில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் பொருட்களையெல்லாம் நடுக்கடலில் கொள்ளையர்களிடம் பறிகொடுத்து வெறுங்கையோடு திரும்பி வந்து சேர்ந்தனர். இந்தியாவைச் சேர்ந்தவர்களே இந்தக் கொள்ளையை நடத்தியிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

டபிள்யூ 199 இலக்க கடம்பன் என்ற பெயரையுடைய வள்ளத்தில் மீன்பிடிக்க நான்கு மீனவர்கள் சென்றனர் பறிகொடுத்த தொகை ஐயாயிரம் ரூபா பெறுமதியெனத் தெரிய வந்துள்ளது. சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த மீன் பிடியாளர்கள் முத்துக்குமாரு நாகலிங்கம், ஆண்டியையா சண்முகம், முருகேசு முருகையா, ஆசைப்பிள்ளை லோகராசா ஆகிய நால்வரும் சென்ற புதன் இரவு ஒன்பது மணியளவில் புறப்பட்டு காரைநகர் கோவள வெளிச்ச வீட்டைத் தாண்டி வெளிச்சம்மறைந்தஒரு மணித்தியாலய தூர இடத்தில் நங்கூரமிட்டுமீன்பிடித்துக்கொண்டிருக்கையில் வள்ளத்தில்வந்த பத்துப்பேர் கொண்டகோஷ்டி கத்தி, பொல்லு, அலவாங்கு மற்றும் பல பயங்கர ஆயுதங்களுடன் இவர்களது வள்ளத்தில் ஏறி சண்டித்தனம்செய்து வள்ளத்தைச் சேதப்படுத்தி பொருட்களை எடுத்துக் கொண்டு தாக்கிவிட்டு மறைந்து விட்டனராம்.

இச்சம்பவம் நள்ளிரவு நடைபெற்றது. வள்ளத்தில் சேதம் ஏற்பட்டது அன்று இரவு முதல் பகல் பத்துமணி வரையும் யாருடைய உதவியும் இல்லாததால் அவ்விடத்தே நின்றனராம்: பின்னர் ஒருவாறு அவ்வழியேவந்த வேறு ஓர் வள்ளத்தின் உதவியுடன் வியாழன் இரவு கரை சேர்ந்தனர்.

''உங்களால் சண்டித்தனம் காட்டமுடியுமானல் காட்டுங்கள்', என்று சவால் விட்டுக் கொண்டு வள்ளத்திலிருந்த தங்களைத் தாக்கியதுடன் தங்கள் உயிருக்கு ஆபத்து உண்டு பண்ணக்கூடிய வகையில் காடையர்கள் மனிதாபிமான மற்றமுறையில் நடந்ததைத் தம்மால் என்றும் மறக்க முடியாது'' என்று பாதிக்கப்பட்ட நால்வரும் தெரிவித்தனர்.

திட்டமிட்டு நடைபெறும் இப்படியான சம்பவங்களை இனிமேல் நடைபெருதவாறு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சுழிபுரம் மேற்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. மு. தம்பியையாவிடம் நால்வரும் வேண்டியுள்ளனர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி கோவில் சங்காபிஷேகம் இன்று நடைபெறுகிறது. 1008 சங்குகள் வைத்து இந்த அபிஷேகம் நடைபெறும். இதன்பின் அன்னதானமும்இடம்பெறும்.

இரவு முருகப் பெருமான் பூந்தண்டிகையில் வள்ளி, தெய்வயானை சமேதராய் வீதிவலம் வருவார்.

— ★ —

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தின் 25-வது நிறைவு விழாவையொட்டி நடாத்தப் படவிருக்கும் கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று 12-ம் திகதி பிற்பகல் குரும்பசிட்டி உதயதாரகை மன்ற மைதானத்தில் நடைபெறும்.

### மூக்குக்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

தேசத்தின் பேரில் உடுத்துறையைச் சேர்ந்த ஐயாதம்பி இராசையா என்பவர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரிப் பொலிசாரால் மாவட்ட நீதிபதி எம் எச் காரியப்பர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபொழுது நீதபதி 13ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். (க)

### பொதுசன...

(5-ம்பக்கத் தொடர்ச்சி)

நன்மைகருதி பாலர்பாடசாலை ஒன்றை அமைக்கநடவடிக்கை எடுத்தல்

நாகர்கோவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் கட்டிடமொன்றை அமைத்து கட்டிடப்பற்றுக் குறையை நீக்கவும் இன்னொரு ஆசிரியரை நியமித்து பாடசாலையின் ஆசிரியர் பற்றுக் குறையை நீக்கநடவடிக்கை எடுக்கவேண்டும். (க)

### வட்டு எம். பி.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கோட்டை எம். பி. யாக யாரை நியமிப்பது என அன்று தீர்மானிக்கவுள்ளது.

அடுத்தநாள் 19ம் திகதி காலை அதே காரியாலயத்தில் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

### கோப்பாய் மயா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அருந்திவிட்டு, யாழ்ப்பாணத்தில் சினிமாப் படம் பார்க்கப் போவதாகச் சொல்லிவிட்டு 100 ரூபாவும் கொண்டுசென்றதாகச் சொன்னார்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில், தனது மகன் தங்கள் வீட்டுக்குப் பதினைந்து யார் தொலைவில் வாழும் ஒருவரின் மனைவியுடன் தொடர்பு கொண்டிருந்ததாகவும். அவருடன் செல்வச்சந்நிதி கோவிலுக்கும் மற்றும் பக்கத்திலுள்ள கோவில் ஒன்றுக்கும் சென்றதாகவும், இதனையிட்டு அப்பெண்ணின் கணவருக்கும் அப்பெண்ணுக்குமிடையே பேசச்சரவு ஏற்பட்டிருந்ததாகவும், இருவரின் தொடர்பு பற்றித் தானும் நேரில் கண்டு எச்சரித்ததாகவும் தெரிவித்தார்.

மரணவிசாரணை நடத்திய பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம் பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

சட்டவைத்திய அதிகாரி எஸ். சரவணபவானந்தன் பிரேதபரிசோதனை நடத்தினார்

சுன்னுகம் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் எஸ் துரைசிங்கம், பொலிஸ் கான்ஸ்டபிள் இ. கந்தசாமி சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

பொலிசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா)

### குட்டிமணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய இருவர்களையும் மத்திய அரசு காப்பாற்ற நடவடிச்கை எடுக்கவேண்டுமென்பதே பிரேரணையின் வாசகமாகும.

திரு. நெடுஞ்செழியன் வழிமொழிந்தார்

இத்தீர்மானப் மீது பல அங்கத்தவர்கள் பேசினார்கள்.

குட்டிமணி, ஜெகன் ஆகிய இருவரையும் காப்பாற்ற நடவடிக்கை எடுப்போம்: அது எமது கடமை என்று மேலவையில் பல அங்கத்தவர்கள் கட்சி பாடுபாடின்றிக் குரல் எழுப்பினார்கள்.

இதேதீர்மானம் நேற்றுமுன் தினம் தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட செய்தி நேற்றைய ஈழநாட்டில் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது.

## மரண அறிவித்தல்

### திருமதி அந்தோனிமுத்து அந்தோனிப்பிள்ளை

குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி அந்தோனிமுத்து அந்தோனிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் ஜே. ஏ. செல்வநாயகம் (J. P./ யாழ், மாநகர சபை உறுப்பினர்] அவர்களின் அன்பு மாமியார் ஆவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று [12-9-82] மாலை 4-30 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: J. A. செல்வநாயகம் [J. P], 43, பாலஉடையார் வீதி, யாழ்ப்பாணம். 4509

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் தொபனத்தாரால் யாழ்ப்பாணம் ... வீதி, ...-ம் இலக்க அச்சகத்தில் 1982 செப். 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100230/...
Elanadu — P. O. Box 49 Telegram: Eelanadu' T'phone: 389 and 8126